Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

கொழும்பு, 26 ஜனவரி, 2023

## Nestlé Professional தனது Nestlé Golden Chef's Hat Competition என்ற போட்டியின் மூலம் இலங்கையில் சமையல் கலைஞர்களை வளர்க்கும் முயற்சியை முன்னெடுக்கிறது

*சுவிஸ் ஹோட்டல் முகாமைத்துவப் பாடசாலைக்கான நான்கு புலமைப்பரிசில்களை வழங்குகிறது*

Nestlé Professional Sri Lanka ஆனது Chef's Guild of Lanka உடன் இணைந்து முன்னெடுக்கின்ற Nestlé Golden Chef's Hat Competition என்ற சமையல் கலைப் போட்டியானது எழுச்சி காணும் என எதிர்பார்க்கப்படுகின்ற சுற்றுலாத்துறையைப் பொறுத்தவரையில் எம்மைத் தயார்படுத்திக் கொள்வதற்கு மிகவும் இன்றியமையாததாகக் காணப்படுகின்ற விருந்தோம்பல் துறையில் புதிய திறமைசாலிகளை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நெஸ்லே லங்கா நிறுவனத்தின் வணிக-வணிக (B2B) வர்த்தகப் பிரிவான Nestlé Professional ஆனது வளர்ச்சி மற்றும் வெற்றிக்கான தனித்துவமான வணிக சவால்கள், வாய்ப்புகளை எதிர்கொள்ளும் தீர்வுகளை வழங்குவதன் மூலம், உணவு சேவை சார்ந்த நிபுணர்களுடன் இணைந்து பணியாற்ற முயற்சிக்கிறது. இந்த நோக்கத்திற்காக, உலகின் முதல் 3 விருந்தோம்பல் பாடசாலைகளில் ஒன்றான Swiss Hotel Management Academy உடன் இந்நிறுவனம் கூட்டுச் சேர்ந்துள்ளது. Swiss Hotel Management Academy இன் உள்நாட்டு இணைப்பாடல் கூட்டாளராக A. Baur & Co. (Pvt) Ltd நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

இதற்கு அமைவாக, Nestlé Golden Chef's Hat Competition என்ற போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு இரண்டு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், மேலும் இரண்டு புலமைப்பரிசில்கள் The Sri Lanka Institute of Tourism and Hotel Management (SLITHM) இன் இரண்டு சிறந்த மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்வொன்றில் Sri Lanka Hospitality Graduates Association (SLHGA) இடம் இந்த புலமைப்பரிசில்களை Nestlé Professional கையளித்துள்ளது. இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக இலங்கை மற்றும் மாலைதீவுக்கான சுவிட்சலாந்து நாட்டின் தூதுவரான மேதகு திரு. டொமினிக் ஃபர்க்லர், Chef Guild of Sri Lanka இன் தலைவரான திரு. ஜெரார்ட் மென்டிஸ், Sri Lanka Hospitality Graduates Association (SLHGA) இன் தலைவரான திரு. அசேல வேவிட்ட, A. Baur's & Co. நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான திரு. றொல்ஃப் பிளேசர், Sri Lanka Institute of Tourism & Hotel Management (SLITHM) இன் தலைவரான ஷிரந்த பீரிஸ், இலங்கை சுற்றுலாத்துறை பணியகத்தின் தலைவரான திரு. சலக்க கஜபாஹு மற்றும் நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான திரு. ஜேசன் அவன்சென்யா ஆகியோர் கலந்து சிறப்பித்துள்ளனர்.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான திரு. ஜேசன் அவன்சென்யா அவர்கள் இந்நிகழ்வில் உரையாற்றுகையில், "பொருளாதாரத்தின் முக்கிய உந்துசக்தியாக விளங்கும் இலங்கையின் விருந்தோம்பல் துறையானது கடந்த சில வருடங்களாக பல பின்னடைவுகளைச் சந்தித்துள்ளது. எனவே, Nestlé Professional மூலம் வழங்கப்படும் சிறந்த தரமான தீர்வுகள் மட்டுமல்லாமல், இது போன்ற மேடைகள் மூலமாகவும் நாட்டின் உணவு சேவைத் துறையை வளர்ப்பதற்கு எங்கள் ஆதரவை வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் உணவின் ஆற்றலை வெளிக்கொணர உறுதிபூண்டுள்ள ஒரு நிறுவனமாக, 115 ஆண்டுகளுக்கும் மேலாக எந்தவொரு சூழ்நிலையிலும் எம்முடன் தொடர்புபட்ட அனைத்துத் தரப்பினருடனும் நாங்கள் தோளோடு தோள் நிற்கிறோம். மேலும், இலங்கைக்கு நற்பயனளிக்கும் இந்த பயணத்தில் ஒத்த சிந்தனை கொண்ட நிறுவனங்களுடன் ஒன்றுபட்டு உழைப்பதில் நாம் பெருமிதம் கொள்கிறோம். Nestlé Golden Chef's Hat Competition இல் புலமைப்பரிசில்களை வெற்றி பெற்றவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்!" என்று குறிப்பிட்டார்.

Chef Guild of Sri Lanka இன் தலைவரும், நிகழ்வின் பிரதம அதிதியுமான திரு. ஜெரார்ட் மென்டிஸ் அவர்கள் தனது கருத்துக்களைப் பகிர்ந்துகொள்கையில், ‘‘தற்போது தொழில்துறை எதிர்நோக்கும் திறமைசாலிகள் வெளியேற்றம் காரணமாக, நாடு முழுவதிலும் உள்ள 1,000 சமையல் கலைஞர்களுக்கு பயிற்சி அளிப்பது எமக்கு பாரிய சவாலாக உள்ளது. இவ்வாறானதொரு பின்னணியில், நெஸ்லே லங்கா நிறுவனம், சுற்றுலாத் துறைக்கு பயனளிக்கும் வகையில், இளம் பயிற்சியாளர்களான சமையல் கலைஞர்களை மேம்படுத்துவதற்குத் தயார்படுத்தும் இந்தத் தக்கதொரு முயற்சிக்கு அனுசரணை வழங்கும் துணிச்சலான முயற்சியை எடுத்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன்,’’ என்று குறிப்பிட்டார்.

‘‘இந்த சிறப்புமிக்க நிகழ்ச்சித்திட்டத்தில் அங்கம் வகிப்பதையிட்டு The Sri Lanka Hospitality Graduate Association மிக்க மகிழ்ச்சி அடைகிறது. Nestlé Professional ஆல் வழங்கப்படும் இப்புலமைப்பரிசில்கள் நிச்சயமாக எமது மாணவர்களின் திறமையை மேம்படுத்த உதவும். ஆதன் மூலமாக, இலங்கையின் விருந்தோம்பல் துறையின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்,’’ என Sri Lanka Hospitality Graduates Association இன் தலைவரான அசேல வேவிட்ட அவர்கள் தெரிவித்தார்.

‘தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறைகள் என அனைவரதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு உணவின் ஆற்றலை வெளிக்கொண்டு வருதல்’ என்ற அதன் நோக்கத்தால் உந்தப்பட்டு, நெஸ்லே நிறுவனம் இலங்கையில் தலைமுறை தலைமுறையாக இளமை முதல் முதுமை வரை உயர்தர உணவு மற்றும் பான வகைகள் மூலம் ஊட்டமளித்துள்ளது. 1906 ஆம் ஆண்டு இலங்கையில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்து, இன்று, நெஸ்லே இலங்கை மக்களின் வாழ்க்கையின் ஒரு அங்கமாக மாறியுள்ளது. 25,000 க்கும் மேற்பட்ட இலங்கை பால் உற்பத்தி மற்றும் தென்னை விவசாயிகள் மற்றும் வீடுகளில் தென்னை வளர்ப்பவர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்திற்கு பங்களித்து வருவதுடன், 800 க்கும் மேற்பட்டவர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பினை வழங்கியுள்ளது. கடுமையான பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாடுகளைப் பயன்படுத்தி, குருநாகலிலுள்ள தனது அதிநவீன தொழிற்சாலையில், இலங்கையில் விற்பனை செய்யப்படும் 90% க்கும் அதிகமான தயாரிப்புகளை உற்பத்தி செய்கிறது.

---


**தொடர்புகளுக்கு:**

| | | | |
|---|---|---|---|
| நிறுவன பொது விவகாரங்கள் | தமித்த குலதுங்க | +94777915949 | Damitha.Kulatunga@lk.nestle.com |
| நிறுவன தொடர்பாடல்கள் | இசுரி அழகக்கோன் | +94760395781 | Isuri.Alahakoon@lk.nestle.com |


**புகைப்படம் 1 இல் இடம்பெற்றுள்ள காட்சி:**
இடமிருந்து வலமாக: A. Baur’s & Co. நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான திரு. **றொல்.ஃப் பிளேசர்**, Nestlé Professional இன் இலங்கைக்கான வணிக முகாமையாளரான **மதுரங்க பெரேரா**, Chef Guild of Lanka இன் தலைவரான சமையல் கலைஞர் **ஜெரார்ட் மென்டிஸ்**, Nestlé Professional இன் துணைத் தலைவரான **றொஷான் பெரேரா**, வெற்றியாளரான கொழும்பு சினமன் கிரான்ட் ஹோட்டலைச் சேர்ந்த **ஆண்டிகே சரித் மாதவ**, இலங்கை மற்றும் மாலைதீவுக்கான சுவிட்சலாந்து நாட்டின் தூதுவரான **மேதகு திரு. டொமினிக் .ஃபர்க்லர்** மற்றும் நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான **ஜேசன் அவன்செனயா** ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.

**புகைப்படம் 2 இல் இடம்பெற்றுள்ள காட்சி:**
இடமிருந்து வலமாக: A. Baur’s & Co. நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான திரு. **றொல்.ஃப் பிளேசர்**, Nestlé Professional இன் இலங்கைக்கான வணிக முகாமையாளரான **மதுரங்க பெரேரா**, Chef Guild of Lanka இன் தலைவரான சமையல் கலைஞர் **ஜெரார்ட் மென்டிஸ்**, Nestlé Professional இன் துணைத் தலைவரான **றொஷான் பெரேரா**, இரண்டாம் இடத்திற்கான வெற்றியாளரான கொழும்பு சினமன் லேக்சைட் ஹோட்டலைச் சேர்ந்த **டபிள்யூ. ஜி. எம். என்.**

**அபேரத்ன**, இலங்கை மற்றும் மாலைதீவுக்கான சுவிட்சலாந்து நாட்டின் தூதுவரான **மேதகு திரு. டொமினிக் ஃபர்க்லர்** மற்றும் நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான **ஜேசன் அவன்செனியா** ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.